6

பெரியார் மாவட்டச் செங்குந்தர் திருமண முறைகள்

பெ. பழனியப்பன்

முன்னுரை

பண்டைத் தமிழ் மக்களிடையே தொழிலால் பாகு படுத்தப்பட்ட பிரிவுகள் நாளடைவில் சாதிகளாக உரு வெடுத்தன. தமிழகத்தில் உள்ள பல்வேறு இனங்களில் செங்குந்தர் இனமும் ஒன்று. வளர்ந்து வரும் தமிழகத் திற்குச் செங்குந்தர்களின் பணியும் உறுதுணையாக அமைகின்றது.

பெரியார் மாவட்டத்தில் சேலம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் செங்குந்தர்கள் தொழில் அடிப்படையில் வந்து குடியேறியுள்ளனர். பல பகுதி களில் இருந்து வந்த மக்கள் கலந்து வாழ்கின்ற சூழலில் பல சடங்குகள் மாற்றங்கள் அடைவதும், புதிய சடங்கு கள் தோற்றமளிப்பதும் நிகழ்ந்துள்ளன.

பெரியார் மாவட்டம் ஈரோடு, பவானி, பெருந்துறை, கோபிச்செட்டிப்பாளையம், சத்தியமங்கலம், காங்கேயம் தாராபுரம் என்னும் ஏழு வட்டங்களைக் கொண்டுள்ளது. இவ்வேழு வட்டங்களில் வாழ்ந்துவரும் மக்களிடையே நிலவும் பழக்கவழக்கங்களும், சடங்குகளும் சிற்சில மாற்றங்களைப் பெற்றுள்ளன.

திருமணம்

மனித வாழ்க்கையில் முக்கியமான நிகழ்ச்சி திருமண மாகும். பண்டைத் தமிழரின் களவு வாழ்க்கையில் ஆணும் பெண்ணும் இணைந்த சூழலில் பொய்யும் வழுவும் தோன்றின. அவற்றை நீக்கும் பொருட்டு இனப் பெரியவர்கள் கரணத்தை (சடங்கை) ஏற்படுத்தி னர் என்பதைத் தொல்காப்பியம்,

> "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
> ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

என்று குறிப்பிடும்.

திருமணம் - சொல்லும் பொருளும்

'திருவென்னுஞ் சொல் அழகு, செல்வம், செம்மை, சிறப்பு முதலிய பொருட்களைத் தரும். கண்டோரால் விரும்பப் பெறும் தன்மை விளங்கும் இடமெல்லாம் திருவும் பொலிகின்றது' என்பதால் அத்தகைய அழகு, செல்வம், செம்மை, சிறப்பு மணமக்களிடையே சேரவேண்டும் என்பதால் 'திருமணம்' என்ற சொல்லைப் பண்டை நாளிலிருந்தே இன்றுவரை கையாண்டு வரு கின்றார்கள் எனலாம்.

திருமணம் 'இன்ப உணர்விற்குத் தீனி போடும் முயற்சி மட்டுமன்று, வாணாள் முழுவதும் இன்ப துன்பம் இரண்டிலும் சமபங்கு போட்டுக் கொண்டு பிறவியின் அறக்கடமையை நிறைவேற்றத் தொடங்கும் முதல் நிகழ்ச்சி ஆகும். ஓர் ஆடவனும் பெண்டும் கணவனும் மனைவியுமாக இல்லறம் நடத்த இசைந்து ஒன்று சேரு வதே மணமாகும். மணத்தல், கலத்தல் அல்லது கூடுதல் மண வாழ்க்கைக்கு என்றே இறைவன் மக்களை ஆணும்

பெண்ணுமாய் படைத்திருப்பதாலும், அதனிடத்து மிகுந்த அறப்பொறுப்புள்ளமையாலும், அது ஆயிரங்காலத்துப் பயிர் ஆகையாலும் வாழ்க்கைத் துணைவர் இருவரும் தெய்வத்தின் முன் அல்லது தெய்வத்தின் பேரில் பலரறிய ஆணையிட்டுக் கூடுவதாலும், மணம் தெய்வத்தன்மை பெற்றுத் திருமணம் எனப் பெற்றது' என்பர் ஞா. தேவநேயன் அவர்கள்.

பெரியார் மாவட்டத்திலேயே வாழ்ந்து வரும் செங்குந்தர்களின் மணச் சடங்குகளுக்கும், பிற மாவட்டத்திலிருந்து வந்து குடியேறிய செங்குந்தர்களின் மணச் சடங்குகளுக்கும் இடையே சில வேற்றுமைகள் காணப்படுகின்றன.

திருமணச் சடங்குகளில் நான்கு நிலைகள்

1. திருமணத்திற்குச் சில நாள்களுக்கு முன் மணமக்கள் இல்லங்களில் நடைபெறும் சடங்குகள்
2. திருமணத்திற்கு முதல்நாள் நடைபெறும் சடங்குகள்
3. திருமணத்தன்று நடைபெறும் சடங்குகள்
4. திருமணம் முடிந்த பின் நடைபெறும் சடங்குகள்

திருமணம் நடைபெறும் இடம்

திருமணம், திருமண மண்டபத்தில் நடைபெறுவது பிற்கால வழக்கமாகும். இவ்வழக்கம் ஏற்பட்ட பிறகு பெரும்பாலும் திருமணங்கள் இருவரின் இசைவோடு மண மண்டபங்களில் நடைபெறுகின்றன.

'திருமணம் வீட்டிலேயே நடைபெற வேண்டும்' என்ற நிலை ஏற்படுகின்ற பொழுது பெரும்பாலும்

மணமகள் வீட்டில் நடைபெறும். மணமகள் வீட்டில் மணம் நடைபெறுவதாக இருந்தால் திருமணச் செலவு மணமகள் வீட்டாரையே சாரும். திருமண மண்டபத்தில் மணம் நடைபெற்றால் மணச்செலவை இருவீட்டாரும் பங்கிட்டுக் கொள்வர். பெரும்பான்மையாக, பழமையில் ஊறிய பெரியவர்கள் மட்டும் இன்னும் மணச்செலவைப் பெண் வீட்டாரே செய்ய வேண்டும்' என்று வற்புறுத்துவது உண்டு.

பரியத் தொகை

மணமகளுக்குச் செலுத்தப்படும் பரியத் தொகையில் வேறுபாடுகள் இடம் பெறுகின்றன. சில பகுதிகளில் ரூபாய் பதினைந்தே முக்காலும், சில ஊர்களில் ரூபாய் இருபத்தெட்டும், வேறு சில பகுதிகளில் ரூபாய் முப்பத்தைந்தும் பரியத் தொகையாகச் செலுத்தும் (மணமகளுக்கு) வழக்கம் உள்ளது முறைப் பெண்ணாக இருந்தால் பரியத் தொகையைக் குறைவாகச் செலுத்தும் வழக்கமும் உண்டு.

உப்பு வாங்குதல்

பெரியார் மாவட்டச் செங்குந்தர்களிடையே திருமணத்திற்கு என்று வாங்கப்படும் பொருள்களில் முதலாவதாக இடம் பெறுவது 'உப்பு' ஆகும். இதை 'உப்புச் சர்க்கரை வாங்கப் போதல்' எனப் பெயரிட்டு அழைப்பர். காலை நேரத்தில் நல்ல நேரமாகப் பார்த்து இருவீட்டாரும் நெருங்கிய உறவினர்களை-சிறப்பாக மாமன் உறவுமுறையினரை அழைத்து வந்து உப்பு வாங்கச் செல்வர்.

மணமக்களின் இல்வாழ்க்கை மங்களமாகவும், செழிப்பாகவும் விளங்க இருவீட்டாரும் மணப்பொருட்

களில் உப்பை வாங்கிவிட்டுப் பிற செலவினங்களைச் செய்யத் தொடங்குவர்.

முளைப்பாலிகை போடுதல்

திருமணம் நடைபெறும் சில நாள்களுக்கு (ஒன்பது நாள்கள் அல்லது பதினொரு நாள்கள்) முன் மங்கல மகளிர் ஒன்பதின்மர் அல்லது பதினொருவர் ஒன்பது வீடுகளுக்குச் சென்று நவதானியங்களைப் பெற்று வரும் வழக்கம் உண்டு. சில இடங்களில் தங்கள் வீட்டிலேயே நவதானியங்களை வாங்கி வந்து முளையிடும் வழக்கமும் உண்டு.

'நவதானியங்கள் நன்கு முளைத்துச் செழிப்பாக வளர்ந்தால் அந்த மணமக்கள் வாழ்க்கை சீரும் சிறப்புமாக வளர்ந்தோங்கும்" என்ற நம்பிக்கையின் அடிப்படையில் 'முளைப்பாலிகை போடுதல்' என்னும் சடங்கைச் செய்வர்.

பெரியார் மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் முளைப்பாலிகை இடும் வழக்கம் இல்லை. ஆனால் பவானி வட்டத்தில் சில இடங்களிலும், சேலம் மாவட்டத்திலிருந்து வந்து குடியேறியவர்கள் வாழ்கின்ற இடங்களிலும், முளைப்பாலிகை போடும் வழக்கம் உண்டு.

தாலி அமைப்பு

தாலிகளில் பெருந்தாலி, சிறுந்தாலி, அரக்கின்றிப் பொன் தகட்டால் ஆன தாலி முதலியன பழக்கத்தில் உள்ளன. பொன்னில் அரக்கு வைத்துச் செய்யப்படும் பொழுது, தாலியின் பருமனால் பெருந்தாலி, சிறுந்தாலி எனப் பெயர் அமைந்தது.

கோபிச்செட்டிப்பாளையம், கவந்தப்பாடி, சத்திய மங்கலம், பெருந்துறை, காங்கேயம், தாராபுரம், மொடக் குறிச்சி முதலிய வட்டங்களில் வாழ்கின்ற செங்குந்தர்கள் சிறிதளவாவது அரக்கு வைத்துத் தாலியைச் செய் கின்றனர். சேலம் மாவட்டத்திலிருந்து வந்து குடியேறின செங்குந்தர்களும் பவானி வட்டத்தில் வாழ்கின்ற பெரும் பாலான செங்குந்தர்களும் அரக்கின்றிப் பொன்னால் செய்த தாலியைப் பயன்படுத்துகின்றனர்.

தாலியின் உருவம் பொறித்தல்

தாலியில் சில உருவங்களைப் பொறிப்பதும் உண்டு சேலம் வட்டச் செங்குந்தர்களிடம் சைவச் சின்னத்தைக் குறிக்கும் சிவலிங்கமும், வேலும் தாலிகளில் பொறிக்கும் வழக்கம் உண்டு. செங்குந்தர்கள் சிவன்வழி தோன்றிய வர்கள் என்பதை விளக்கும் பொருட்டு மங்கலச் சின்னமான தாலியின் அமைப்பில் சைவக் குறியீடுகளை அமைத்திருக்கலாம். பெரியார் மாவட்டத்திலேயே வாழ்ந்து வருகின்ற செங்குந்தர்களின் தாலியின் முன்பகுதி யில் சிவப்புக்கல் பதிக்கப்படுகின்றது. சில தாலிகளில் வேல் போன்ற சூலாயுத அமைப்பும் இருக்கின்றது.

பட்டினிச் சாப்பாடு (ஒருசந்திச் சோறு)

பெரியார் மாவட்டச் செங்குந்தர்களிடையே இச்சடங்கு பரவலாகக் கடைபிடிக்கப்படுகின்றது "மண நாளுக்கு இரண்டு நாட்களுக்கு முன் பட்டினிச்சாப்பாடு என்ற சடங்கு நடைபெறும். 'சீர்த்தண்ணீருக்குச் சென்ற மங்கலப் பெண்டிர் கொண்டு வந்த சீர்த் தண்ணீரினால் எச்சில் படாமல் இச்சாப்பாடு செய்யப் படும்". மணமக்கள் இருவர் வீட்டிலும் இச்சடங்கு நடைபெறும். பட்டினிச் சாப்பாட்டின்போது மண மக்களின் சகோதரிகள் மணமக்களுக்குப் புத்தாடைகள்

எடுத்துத் தருவர். வசதி படைத்தோர் தங்க அணிகலன்களையும் அணிவிப்பர்.

மணமகன், பட்டினிச் சாப்பாட்டைச் சமைப்பவள். அவளின் கணவன், தாலிப்படையல் செய்பவன், அவன் மனைவி என ஐவர் பட்டினிச் சாப்பாட்டைச் சாப்பிடுவர். அடுத்த நாள் நண்பகல் அல்லது மாலை தாலிப்படையல் செய்யும்வரை மேற்குறிப்பிட்ட ஐவரும் விரதம் இருப்பர்.

சேலம் மாவட்டப் பகுதியிலிருந்து வந்து குடியேறிய செங்குந்தர்களிடமும் பவானியில் வாழ்கின்ற பெரும்பாலான செங்குந்தர்களிடமும் திருமணத்திற்கு முதல் நாள் மணமக்கள் ஒருசந்தி விரதம் இருக்கும் வழக்கம் உள்ளது. மணமகன் மட்டும் ஒருசந்தி விரதம் இருப்பதே பெரும்பாலும் நடைபெறுகின்றது. காலப் போக்கில் இச்சடங்கு அருகியே நடைபெறுவதைக் காண முடிகின்றது.

தாலிப்படையல்

மணமகன் வீட்டில் மட்டும் இச்சடங்கு செய்யப் படுகின்றது. மணம் நடைபெறும் இடத்திற்குச் செல்வதற்கு முன் அவரவர் வசதியைப் பொறுத்து நண் பகல் நேரத்திலோ அல்லது இரவு நேரத்திலோ இச் சடங்கு செய்யப்படும். மண்டபத்தில் நடைபெறும் திருமணங்களில் பெரும்பாலானோர் தாலிப்படையலை மண்டபத்திலேயே செய்வர். ஆனால் வீட்டில் தனியாக எச்சில் படாமல் சமைத்து மணமகன் 'ஒருசந்தி' விரத' மிருந்து படைப்பதுதான் சிறந்தது.

மணமகனின் தாய் அல்லது பங்காளி முறை உடைய பெண் தாலிப்படையல் சாப்பாட்டைச் செய்வது வழக்க

மாகும். ஐந்து அல்லது ஒன்பது அல்லது பதினொன்று (பங்காளிகள் எண்ணிக்கையைப் பொறுத்து) இலைகள் போடப்பட்டு ஐந்து வகைக் காய்கறிகள் மற்றும் இனிப்புப் பலகாரங்களுடன் சாப்பாடு பரிமாறப் படுகின்றது. மணமக்கள் உடுத்தும் திருமண ஆடைகள், உறவினர் ஆடைகள், மஞ்சள் நூலில் கோர்க்கப்பட்ட தாலி முதலியன வைக்கப்பட்டிருக்கும். மணமகனே பூசை செய்து கற்பூர தீபத்தை ஏற்றி உறவினர்கள் அனைவருக்கும் திருநீறு, குங்குமம் கொடுப்பான். பின்னர் விரதம் இருந்த மணமகன், மணமகள், பங்காளி, மாமன், உறவினர் தாலிப் படையல் உணவைச் சாப்பிடுவர்.

பெரியார் மாவட்டப் பல பகுதிகளில் இப்படையல் மணமகன் வீட்டிலும், மணமகள் வீட்டிலும் தனித் தனியே செய்யப்படும். இப்படையலில் சிலவிடங்களில் வேறுபாடுகளும் இடம் பெற்றுள்ளன. ‘பக்கத்தில் நீர் இருக்கும் இடத்திற்கு (கிணற்றுக்கு)ச் சென்று காதோலை, கருகுமணி, இளநீர், பச்சரிசிமாவு, தென்னம்பாளை, நாலணா வைத்து முடிந்த சிவப்புநிறத் துணி முதலியவற்றைக் கன்னிமார் முன் வைத்துப்படைப் பர். கன்னிமார்களுக்குப் பூசை செய்த பின் அப்பொருட் களை அப்படியே வைத்துவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் வந்திடுவர். மேற்கூறிய பொருட்களை ஓலைக்கூடையில் வைத்து எடுத்துச் செல்வர். இச்சடங்கை ‘கங்கைக் கரைக்குப் போதல்’ என்று அழைப்பர். சிலவிடங்களில் பச்சரிசி மாவைத் திரும்பக் கொண்டு வந்து வீட்டில் தாலிப்படையலைச் செய்த பின் சாப்பிடுவர்.

தாலிப்படையல் உணவைச் சாப்பிட்டபின் மண மகன் திருமண ஆடையை அணிந்துகொண்டு உறவினர் சூழ மணம் நடைபெறும் இடத்திற்குப் புறப்படுவான்.

சீர்க்கூடை

மணவிழாவில் இச்சீர்க்கூடைச் சடங்கு தொன்று தொட்டு வாழ்ந்துவரும் பெரியார் மாவட்டச் செங்குந்தர் களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்றதாக விளங்கு கிறது. மணம் நடைபெறும் இடத்திற்குப் புறப்படும் மணமகனுடன் இச்சீர்கூடையை மணமகனின் சகோதரி கள் எடுத்து வருவது வழக்கம்.

சேலம் மாவட்டத்தில் இருந்து வந்து குடியேறிய செங்குந்தர்களிடம் இச்சீர்க்கூடைச் சடங்கு இடம் பெறுவது இல்லை.

சீர்க்கூடையில் இடம்பெறும் பொருட்கள்

மஞ்சக் கொப்பு இருபத்தொன்று; வெற்றிலை பதி னொரு கவுளி; தேவையான பாக்கு; வாழைப்பழம் மூன்று சீப்பு; கோட்டை நெல் ஐந்து படி; பச்சரிசி ஏழு படி; சந்தனம், குங்குமம்; அச்சுவெல்லம் பதினொன்று; மண மக்கள் அணியும் மிஞ்சிகள்; மணமகளின் கூறைப் புடைவை; பண்டார மாலை; பெண்ணுக்குரிய மாலை: நெற்றிக்கோர்வை மாலை; நெய் ஒரு சொம்பு முதலியன.

மாப்பிள்ளை அழைப்பு-பெண் அழைப்பு

பெரியார் மாவட்டச் செங்குந்தர்களிடையே மாப் பிள்ளை அழைப்பே பெருவழக்காகும். மணமகன் தன்னுடைய நெருங்கிய உறவினர்களுடன் மணம் நடைபெறும் இடத்திற்கு அருகாமையில் உள்ள கோயி லில் சென்று தங்கிக் கொள்வான். பெண் வீட்டார் சென்று மணம் நடைபெறும் இடத்திற்கு மணமகனை அழைத்து வருவர்.

சேலம் மாவட்டத்திலிருந்து வந்து குடியேறிய செங் குந்தர்களிடமும், பவானி வட்டத்தில் வாழ்கின்ற பெரும் பாலான செங்குந்தர்களிடமும் பெண் அழைப்பே

நடைபெறுகின்றது. 'மணமகன் வீட்டார் ஐவரைத் தேங்காய்ப் பழத்தட்டுடன் மணமகள் வீட்டிற்கு அனுப்பி வைப்பர். அவ் ஐவரும் 'பெண்ணை அழைத்து விடுங்கள்' என்று மணமகள் வீட்டாரிடம் சொல்லி விட்டு வருவர். இவர்களில் ஒருவர் மட்டும் அங்கேயே இருந்து மணப்பெண் வீட்டாருடன் வருவதுண்டு.

திருமணத்தன்று இரவு சாளங்கரப்பானைக்குச் செல்லுதல், புற்றுமண் கொண்டு வருதல் போன்ற சடங்குகள் நடைபெறும்.

காலை நேரத்தில் மணப்பொங்கல் வைத்தல், நலுங்கு வைத்தல், அரசாணிக்கால் நடுதல், ஆயிரம் பெருந்திரி விளக்கேற்றல், கணபதி பூசை, மணமக்களுக்குக் கங்கணம் கட்டுதல், மணமகனுக்குப் பாதபூசை செய்தல் (மணம் நடைபெறும் இடத்தின் வாயிலுக்கு அருகில்) மணமகளுக்குப் பட்டம் கட்டுதல், மங்கல நாண் கட்டுதல் முதலிய சடங்குகள் செவ்வனே நடைபெறும்.

திருமணம் முடிந்த பின்னர் பல முக்கியமான சடங்குகள் நடைபெறும். மணமக்கள் தங்கள் பெற்றோருக்குப் பாதபூசை செய்தல், மணமகளை தாரை வார்த்தல், கைக்கோர்வை, வெள்ளியும் பொன்னும் எடுத்தல். மணமக்கள் பால்பழம் அருந்துதல், முளைப்பாலிகை விடுதல், கங்கணம் அவிழ்த்தல், தாலியைத் தங்கச் சரட்டில் மாற்றுதல்] போன்ற சடங்குகள் நடைபெறும்.

மணமக்கள் அழைப்பிற்குப் பின் சாந்தி முகூர்த்தம் என்னும் சடங்கு நடைபெறும். இச்சடங்கு பெரும்பாலான குடும்பத்தினர் திருமணம் நடைபெற்ற

நாளன்றே இரவில் நல்ல நேரத்தில் 'ஓரில்லில் சேர்த்தல்' என்ற சாந்தி முகூர்த்தச் சடங்கு நடைபெறும். இச் சடங்கையும் தெய்வ வழிபாட்டிற்குப் பின்னரே நடத்தி வைக்கின்றனர்.

முடிவுரை

பண்டைக் காலந்தொட்டு மக்கள் வாழ்க்கையில் சடங்குகள் பல இடம்பெறுகின்றன. தொன்றுதொட்டுப் பின்பற்றி வரும் சடங்குகள் பல இடம் பெறுகின்றன. தொன்று தொட்டுப் பின்பற்றி வரும் சடங்குகள் அனைத்தும் சமூக மக்களிடம் பரவி உள்ளன. ஆனால் மக்களனைவரும் எல்லாவகையான சடங்குகளையும் பின் பற்றுகின்றனர் என்று சொல்ல முடியாது. காலத்திற் கேற்பச் சடங்குகள் மாறுபடுகின்றன-மறைகின்றன. இதற்கு மக்களின் நாகரிகக் கலப்பும் காரணமாக அமையலாம்.

□□□